செ.வெ.எண் : 12/ மார்ச் நாள் : 05.03.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## திருவாடானை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில்

## மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு வாக்குச்சாவடி மையங்களில் இன்று (05.03.2021) மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் நேரடியாக ஆய்வு செய்தார்.

குறிப்பாக, தேவிபட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, திருப்பாளைக்குடி அரசு மேல்நிலைப்பள்ளி, உப்பூர் சத்திரம் அரசு மேல்நிலைப்பள்ளி, நம்புதாளை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளி, தொண்டி செய்யது முகமது அரசு மேல்நிலைப்பள்ளி, திருவாடானை அரசு மேல்நிலைப்பள்ளி, சின்னகீரை மங்கலம் R.C.தொடக்கப் பள்ளி, ஆர்.எஸ்.மங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021 தொடர்பான அறிவிப்பையடுத்து இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 4 சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் முன்னேற்பாடு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2019-ன் போது மொத்தம் 1,369 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் தற்போது கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 1050 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச்சாவடி மையம் என்கிற வீதத்தில் அமைத்திட வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவுரை வழங்கியுள்ளது. அதன்படி, மாவட்டத்தில் என்ற கூடுதலாக 278 வாக்குச்சாவடி மையங்கள் அமைத்திட தேர்வு செய்யப்பட்டு முன்மொழிவுகள் ஒப்புதலுக்காக இந்திய தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் மாவட்டத்தில் தேர்தல் பணிகளுக்காக மொத்தம் 1,647 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தலின்படி, தேர்வு செய்யப்பட்டுள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களும் தரைதளத்தில் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் மின்சார வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்ற அடிப்படை வசதிகள் இருப்பதை உறுதி செய்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மாற்றுத்திறனாளிகள் வசதிக்காக சக்கர நாற்காலி மற்றும் சாய்வு தளம் இருப்பதை உறுதி செய்திடவும் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகள் அனைத்தும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.வீ.கேசவதாசன், வட்டாட்சியர்கள் திரு.வி.ரவிச்சந்திரன் (இராமநாதபுரம்), திரு.வி.முருகவேல் (ஆர்.எஸ்.மங்கலம்), திரு.செந்தில்வேல் முருகன் (திருவாடானை) திரு.செந்தில்குமார் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**